## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, FAST TRACK COURT, ARANI.

## S.C.No.125/2018

**Deposition of Witness for : P.W.15**

**Name : மருத்துவர். திரு. தண்டர் சீப்**

**Father's Name :**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

**எதிரிகள் 1, 2,5 முதல் 8 ஆஜர். 4வது ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, 3வது எதிரி இறந்துவிட்டார்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.03.2024.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது அரசு மருத்துவக் கல்லூரி, கிருஷ்ணகிரியில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் பேராசிரியராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 10.08.2011 அன்று சென்னை பொது அரசு மருத்துவமனையில் நான் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் போதகராக பணியாற்றிய போது, தெள்ளார் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின்படி குற்ற எண்.204/2011

வழக்கில் சம்மந்தப்பட்ட 70 வயது மதிக்கத்தக்க வி. கண்ணன் என்பவரின் பிரேதத்தை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பிரச்சன்னா மாதவன் அவர்கள் அடையாளம் காட்ட அன்று தினம் காலை 11.40 மணியளவில் பிரேத கூராய்வு மேற்கொண்டேன்.

பிரேத கூராய்வில் மரண விறைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது. காயங்கள் 1. 15 செ.மீ நீளத்தில் தையலிட்ட காயம் 19 தையல்களுடன் வலது பக்க தலையின் உச்சி மற்றும் பக்கவாட்டில் காணப்பட்டது. 2. 4 செ.மீ. நீளத்தில் தையலிட்ட காயம் 5 தையல்களுடன் இடது பக்க தலையில் உச்சி மற்றும் பக்கவாட்டில் காணப்பட்டது. தலையை கூராய்ந்து பார்த்தில், தலைதோள் ஆழத்தில் படர்ந்து குணமடைந்துக் கொண்டிருக்கும் கன்றிய காயம் வலது பக்க முன்பகுதி உச்சி பகுதி மற்றும் பக்கவாட்டில், இடது பக்க உச்சி பகுதி மற்றும் பக்கவாட்டில் காணப்பட்டது.

வலது மற்றும் இடது பக்கவாட்டில் உள்ள தசைகள் கன்றி காணப்பட்டது. மண்டையோட்டில் 5 x 3 செ.மீ. அளவிற்கு வலது உச்சிபகுதியில் எலும்பினை நீக்கப்பட்டு மற்றும் மூளை தெரிய காணப்பட்டது. நீக்கப்பட்ட எலும்பு பகுதியின் ஓரங்கள் சீரற்று காணப்பட்டது. நீக்கப்பட்ட எலும்பு பகுதியிலிருந்து 4 செ.மீ. நீளத்தில் எலும்பு பிளவு முறிவு வலது பக்க உச்சிபகுதியில் காணப்பட்டது.

நீக்கப்பட்ட எலும்பு பகுதியின் பின்பகுதியிலிருந்து 6 செ.மீ. அளவிற்கு எலும்பு பிளவு முறிவு ஓரப்பக்க எலும்பில் காணப்பட்டது. மூளையின் மேல் சவ்விற்கு அடியில் ரத்தக் கசிவு வலது பக்க பின்மூளை பகுதியில் காணப்பட்டது. மூளையின் கீழ் சவ்விற்க அடியில் மெல்லிய ரத்தக் கசிவு வலது பக்க உச்சிபகுதி மற்றும் இடது பக்கு உச்சி மற்றும் பின்பகுதியில் காணப்பட்டது.

வலது பக்க உச்சிபகுதியின் மூளையில் 2.5 x 2 x 1.5 செ.மீ. அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது. மூளையின் அடிப்பகுதியில் மேல்சவ்விற்கு அடியில் மஞ்சள் பச்சை நிற சீழ் காணப்பட்டது. மூளையின் கீழ் சவ்விற்கு அடியில் மஞ்சள் பச்சை நிற சீழ் வலது மற்றும் இடது உச்சிபகுதியில் முன்பகுதி மற்றும் ஓரப்பகுதியில் காணப்பட்டது. மூளையின் வெட்டுத் தோற்றத்தில் 6 x 3 x 3 செ.மீ. அளவில் கன்றிய காயம் வலது பக்க உச்சி மற்றும் பின்பகுதியில் காணப்பட்டது.

மண்டையோட்டின் அடிப்பாகத்தில் வலது பக்க பின்பக்கத்தில் 6 செ.மீ. எலும்புபிளவு காணப்பட்டது. மார்பு கூடு இயல்பாக இருந்தது. இருதயம் இயல்பான அளவில் இருதய அறைகளில் உறைந்த ரத்தம் காணப்பட்டது. இருதய வால்வுகள் மகா ரததக் குழாய்கள் இயல்பாக இருந்தது. நுரையீரல்கள் இயல்பான அளவில் இருந்தது. நுரையீரலின் வெட்டுத் தோற்றம் ரத்தம் தோய்ந்த நிலையில் இருந்தது. இரைப்பை காலியாக இருந்தது. இரைப்பையின் உள்தோல் ரத்தம் தோய்ந்த நிலையில் இருந்தது.

கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பாக இருந்தது. அவைகளின் வெட்டுத் தோற்றம் ரத்தம் தோய்ந்த நிலையில் இருந்தது. சிறுநீரகப்பை காலியாக இருந்தது. நாவடி எலும்பு, இடுப்பெலும்பு மற்றும் தண்டுவடம் இயல்பாக இருந்தது. உள்ளுறுப்புகளை ரசாயன பரிசோதனைக்காக சேகரித்து அனுப்பப்பட்டன.

**கருத்து-**

மேற்கண்ட நபருக்கு தலையில்ஏற்பட்ட காயத்தின் விளைவாக இறப்பு நேர்ந்திருக்கக் கூடும் என்று கருத்து கூறி சான்று வழங்கினேன். நான்

வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **<u>அ.சா.ஆ.20</u>**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

இறந்த நபரின் உள்ளுறுப்புகளின் ரசாயன பரிசோதனை அறிக்கையில் மதுவோ மற்ற நச்சுப் பொருளோ கண்டறியப்படவில்லை என்று அறிக்கை பெறப்பட்டது. உள்ளுறுப்பு ஆய்வறிக்கை **<u>அ.சா.ஆ.21-</u>**ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. இந்த வழக்குச் சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>1, 2 மற்றும் 4 முதல் 7வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்த நபரான கண்ணன் என்பவர் ஏற்கனவே அரசு பொது மருத்துவமனை, சென்னையில் தலைக்காயத்திற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மூளை அறுவை சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு,அதன் பிறகு மருத்துவமனையில் இறந்ததால் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டார் என்றால் சரிதான். 19 தையல் போடப்பட்ட காயமானது அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போது ஏற்பட்ட காயம் என்றால் சரிதான்.

5 தையல் போடப்பட்ட காயமானது மருத்துவரால் போடப்பட்டதா என்றால் நான் பிரேதத்தை மட்டும் தான் பரிசோதனை செய்தேன், தையல் யார் போட்டது என்று எனக்கு தெரியாது. 2 தையல் காயங்களை தான் நான் காயங்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நீக்கப்பட்ட எலும்பு பகுதி அறுவை சிகிச்சையின் போது இருக்க வாய்ப்புள்ளதா என்றால் ஏற்கனவே தலை எலும்பு உடைந்த பகுதியை ஸ்கேன் மூலம் பரிசோதனை செய்த பிறகு, உடைந்த பகுதியை அறுவை சிகிச்சையின் போது நீக்கப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

நான் ஸ்கேனோ, அறுவை சிகிச்சையோ செய்யவில்லை என்றால் சரிதான், நீக்கப்பட்ட எலும்பு பகுதியின் ஓரங்கள் சீரற்று காணப்பட்டதால் அது உடைந்த பகுதியாக இருக்க வாய்ப்புள்ளது என்று என்னுடைய பரிசோதனையில் நான் தெரிந்துக் கொண்டேன். மண்டையோட்டு உடைந்த பகுதியை ஆயுதங்கள் கொண்டு துளையிட்டு, அறுத்து எடுக்கப்படும் என்றால் சரிதான், அவ்வாறு இருப்பின் ஓரங்கள் சீராக இருக்கும்.

எலும்பு நோய் மற்றும் எலும்பு வலிமையின்மையினால் ஒரு எலும்பு உடையும் போது வேறு பகுதியில் நல்ல எலும்பும் உடைய வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பில்லை, உடைந்ததின் தொடர்ச்சி இருக்க வாய்ப்புள்ளது. இறந்த நபர் எவ்வளவு நாட்களுக்கு முன்பு தலையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது, என்னுடைய பிரேத பரிசோதனையிலும் குறிப்பிடவில்லை.

அறுவை சிகிச்சைக்கு பிறகு தலை கபாலத்திலிருந்து ரத்தக் கசிவு ஏற்பட்டு தேங்கக்கூடிய வாய்ப்புள்ளதா என்றால் ரத்தக் கசிவு ஏற்படும் அறுவை சிகிச்சைகளுக்கு அதற்கான ட்டியூப் வைப்பது வழக்கம், ரத்தக் கசிவு நின்ற உடன் நீக்கிவிடுவது வழக்கம், அனைத்து அறுவை சிகிச்சைகளுக்கும் ரத்தக் கசிவு ஏற்படும் என்று சொல்லமுடியாது. பிரேத பரிசோதனை செய்த பிரேதத்திற்கு அது மாதிரியான ட்டியூப் எதுவும் இல்லை.

அனைத்து அறுவை சிகிச்சைகளுக்கும் ட்டியூப் வைத்து ரத்தக் கசிவை வெளியே எடுப்பார்கள் என்றால் சரியல்ல. நான் பிரேத பரிசோதனை செய்த பிரேதத்தின் தலையில் ரத்தக் கசிவிற்கான ட்டியூப் இருந்ததற்கான அடையாளம் இருந்ததா என்றால் இல்லை. சீழ் பிடிப்பது என்பது ஏற்பட்ட ரத்தக்

கசிவினாலோ அல்லது கசிந்த ரத்தம் தேங்குவதாலோ என்றால் சீழானது காயத்தின் விளைவாக ஏற்பட்ட தொற்றினால் ஏற்பட்டது.

இறப்பானது தொற்றினால் ஏற்பட்டதா என்றால் தொற்றே காயத்தினால் தான் ஏற்பட்டது. இறப்பிற்கு முந்தைய காயங்கள் என்னுடைய பிரேத பரிசோதனையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் பிரேத பரிசோதனைக்கு வரும் பிரேதங்களுக்கு பொதுவாக பிரேத பரிசோதனையில் குறியப்பிட்ட காயங்கள் இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள், இறப்பிற்கு பின்பு ஏற்பட்ட காயங்கள் குறிப்பிட்டு சொல்லப்படும். இந்த பிரேத பரிசோதனையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இறப்பிற்கு பின்பு காயங்கள் இல்லாததால் சொல்லப்படவில்லை.

இந்த வழக்கில் நான் சொல்லியுள்ள இறப்பிற்கான கருத்தில் தலைக்காயம் என்பதை நான் எதை சொல்கிறேன் என்றால் தலைதோளில் ஏற்பட்ட கன்றிய காயம், மண்டையோட்டில் ஏற்பட்ட எலும்பு பிளவு முறிவு, மூளையின் சவ்விற்கு அடியில் ஏற்பட்ட ரத்தக் கசிவு, மூளையில் காணப்பட்ட கிழிந்த மற்றும் கன்றிய காயம், மண்டையோட்டின் அடிபாகத்தில் ஏற்பட்ட எலும்பு பிளவு முறிவு ஆகியவற்றின் அடிப்படையில் மேற்சொன்ன நபர் தலைக்காயத்தின் விளைவாக இறப்பு நேர்ந்திருக்கக் கூடும் என்று கருத்து வழங்கியுள்ளேன்.

தலைக்காயம் என்பது நான் சொன்ன தலைக்காயங்கள் அல்ல, அவை எல்லாம் அறுவை சிகிச்சையினால் ஏற்பட்டவை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் உள்ள ராடு மட்டுமல்லாமல் கடினமான ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் மழுங்கிய ஆயுதத்தால் கூர்மையில்லாத ஆயுதத்தால் ஏற்பட வாய்ப்புண்டு.

<u>**8வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u> - இல்லை

**<u>மறு விசாரணை -</u>**

அடிப்பட்ட நபருக்கு எதற்காக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் பொதுவாக தலையில் காயம் பட்ட நபருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்வதே மூளையில் ஏற்பட்ட ரத்தக் கசிவை நீக்குவதற்காக தான். மண்டையோட்டை உடைக்காமல் ரத்தக் கசிவு எடுக்க முடியுமா என்றால் மண்டையோட்டில் அறுவை சிகிச்சை செய்த பிறகு தான் எடுக்க முடியும். தலைக்காயம் நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் நீதிமன்றத்தில் உள்ள இரும்பு ராடால் ஏற்பட வாய்ப்புண்டு.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional Sessions Judge,
Arani.